செவ்வாய்க் கிழமை, 1974 சனவரி 29.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

Home Guards.

* 211 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR : **Will the** Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether any review of the working of the **Home Guards** has been undertaken in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) and (இ) விவர அறிக்கை @ ஒன்று சட்டமன்ற பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

*212. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

ஊர்க்காவல் படையில் தற்போது பணியாற்றும் பெண்கள் எத்தனை பேர்கள்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :—531 பெண்கள்.

திரு ஆ. பரந்தாமன் : தலைவர் அவர்களே, இந்த ஊர்க்காவல் படை கிராமப் புறங்களில் இன்னும் அதிகமான அளவுக்குச் செயல்படவில்லை. அதைச் செயல்படுத்த அரசு ஏதேனும் செயற்குறிப்பு வைத்திருக்கிறதா? இந்த அறிக்கையில், டெபுடி சூபரின்டெண்ட் ஆப் போலிஸ் (ஆர்ம்டு ரிசர்வ்)க்கு ஆகும் செலவில் 50 சத வீதத்தை மத்திய அரசு ஏற்றுக் கொள்ளவேண்டுமென்ற பரிந்துரை காணப்படுகிறது. அதைப்பற்றி நமது அரசு முடிவு செய்திருக்கிறதா? இது குறித்து மத்திய அரசைக் கேட்டிருக்கிறதா?

@ 506–507-ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.